மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதாவது இடையூறு இருப்பின் அதைத் தெரிவித்தால், அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) குளித்தலை தொகுதி, தோகைமலை இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை என்பது 20 ஊராட்சிகளின் மையப் பகுதியாக உள்ளது. தோகைமலை இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் 3,000 பேர் பயின்று வருகிறார்கள். இதில் பெண்கள் மட்டும் 1,100 பேர் பயின்று வருகிறார்கள். ஆகவே, பெண்களின் வசதி கருதி, இந்த அரசு மேல்நிலைப் பள்ளியை தனியாகப் பிரித்து ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக அமைத்துத் தருவது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்பட்டு, அதனைப் பிரித்து, பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளி, ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஊ) அரக்கோணம் நகரம், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளின்போது பழுதடைந்த தெருக்களைச் சீரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச்*

செயல்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். தற்போது, பணிகள் நிறைவடைந்து, மொத்தம் 280 தெருக்கள், நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதில், 92 தெருக்களில் சீரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 188 தெருக்கள் குண்டும், குழியுமாக உள்ளதால், மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். எனவே, மீதமுள்ள 188 தெருக்களையும் சீரமைப்பதற்கு, இதை சிறப்பு இனமாக எடுத்துக்கொண்டு இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்து, அந்த 188 தெருக்களையும் சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்துள்ளார். பல்வேறு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளும், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதிகளில்தான் இந்தமாதிரியான சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதேபோல,* IUDM, TURIF *போன்ற நிதிகளிலிருந்து, எந்தெந்தச் சாலைகள் சேதமடைந்துள்ளன என்று கணக்கிடப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப சாலை சீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—45

(எ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்தினை தரமுயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*